கொள்கைமகன் வாழ்க!

உருக்கியபொன்
போன்றெழுந்தான்
ஒளிப்பரிதி!... இருள்
ஓட்டவந்தான்! தீட்டவந்தான்
வெளிச்சவிதி!
திருக்குவளை வழியில்வந்த
தமிழ்க்குருதி!... இளந்
திராவிடர்க்குத்
தலைமைதாங்கும்
உதயநிதி!

சேப்பாக்கம் என்பதொரு
சிறுபகுதி!... எட்டுத்
திசைகளுமே தமிழ்நாட்டில்
அவன்தொகுதி!
வாய்ப்பாக நாடு, மொழி,
இனம்கருதி... புது
வரலாறு படைத்திடுவான்!
இதுஉறுதி!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
" அன்பகத்தை" வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் "தளபதி"யின்
கொள்கைமகன் வாழ்க!

செல்லமே, தந்தை உள்ளமே,
அன்பு வெள்ளமே நீ வாழ்க!
சிங்கமே, கலை அங்கமே,
ஒளிர் தங்கமே! நீ வாழ்க!

ஆரியத்தை வேரறுக்கும்
சேரன்இவன் வாழ்க!
அழகுதமிழ்ப் பாண்டியனாம்
மாறன்இவன் வாழ்க!
தீரம்கொண்டு களத்தில்நிற்கும்
வீரன்இவன் வாழ்க!
" திருக்குவளைச் சோழனுக்குப்"
பேரன்இவன் வாழ்க!

தென்னனே, இளம் மன்னனே,
எழில் வண்ணனே! நீ வாழ்க!
செங்கதிர் நிகர் செல்வனே,
மனக் கள்வனே! நீ வாழ்க!

இரக்கத்தின் அருள்குணத்தின்
எல்லைஇவன் வாழ்க!
இனப்பகைவர் கனவுகளில்
தொல்லைஇவன் வாழ்க!
சிரிக்கின்ற பூஞ்சிரிப்பில்
முல்லைஇவன் வாழ்க!
"சேப்பாக்கம் தொகுதி"செல்லப்
பிள்ளைஇவன் வாழ்க!

கன்னலே, குளிர் திங்களே,
நறுந் தென்றலே! நீ வாழ்க!
கைசிவந் திடும் வள்ளலே,
உயர் செம்மலே! நீ வாழ்க!

முன்னேற்றக் கழகத்தின்
இளையநதி வாழ்க!
பொன்னேட்டு வரலாற்றின்
புதியவிதி வாழ்க!
தென்னாட்டுப் போர்ப்படையின்
இதயநிதி வாழ்க!

திராவிடத்தின் விடியல்!எங்கள்
உதயநிதி வாழ்க!

அந்தமே இலாச் சொந்தமே,
உயிர்ப் பந்தமே! நீ வாழ்க!
"அண்ணனும் பெரி யாருமே"
இரு கண்எனும் நீ வாழ்க!

அன்னைதுர்கா ஈன்றெடுத்த
அன்புமகன் வாழ்க!
" அன்பகத்தை" வழிநடத்தும்
அறிவுமகன் வாழ்க!
தன்னைவென்று தரணிவெல்ல
வந்தமகன் வாழ்க!
தலைவர்எங்கள் "தளபதி"யின்
கொள்கைமகன் வாழ்க!

கவிச்சுடர்
கவிதைப் பித்தன்

நவ.27 இளைஞர் எழுச்சி நாளில் சூளுரைப்போம்!

நம் தளபதியார் ஈன்றெடுத்த தன்மான விளைச்சல்.

பவளவிழா காணும் நம் கழகத்தின் எதிர் கால பாய்ச்சல்.

கழகத்துக்கு எதிராய் சதிராடும் எதிரிகளையும், சமீபத்திய உதிரிகளையும் தனக்கே உரிய பாணியில் பதிலடி கொடுக்கும் வல்லவர். கழக உடன்பிறப்புகளுக்கு பேரன்பும் போர்க்குணமும் கொண்ட நல்லவர். கழகத்தின் மூத்தத் தலைவர்களின் நம்பிக்கை நட்சத்திரம். அடுத்த அரை நூற்றாண்டு காலம் திராவிடப் பேரியக்கமாம் நம் கழகம் பயணிக்கவுள்ள பாதைக்கான திசை வழிகாட்டி தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

2019 மக்களவைத் தேர்தலில் கழகம் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுக்க நம் சின்னவர் மேற்கொண்ட சூறாவளி பரப்புரை பயணம் தமிழ்நாட்டு அரசியல் களத்தில் அதிர்வலைகளை உண்டாக்கியது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, பணமதிப்பிழப்பு என்று அப்போதைய ஒன்றிய அரசின் குளறுபடிகளை கையில் எடுத்து அவர் சொல்லி அடித்தது ஒவ்வொன்றும் சிக்சர் ரகம். தங்கள் வியூகங்கள் அனைத்தும் தவிடுபொடி ஆனதை கண்டு மிக்சர் தின்பதை தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை அந்த மக்கள் விரோத கும்பலால். அந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 38 மக்களவை தொகுதிகளை வென்றெடுத்தது. சின்னவரின் அரசியல் பயணத்திற்கான அச்சாணியாக அமைந்தது அத்தேர்தல்.

உண்மையாய் உழைக்கும் யாரையும் கழகம் மறந்தது இல்லை, உழைப்பவரை நோக்கி பொறுப்புகள் தேடி வரும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நமது கழகதலைவர் சொல்லியதை போல் கழகம் சிவப்பு கம்பளம் விரித்து சின்னவரின் உழைப்பை வரவேற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் ஆலமரத்தின் ஆணி வேரான இளைஞரணி செயலாளர் பொறுப்பு தரப்பட்டது.

அவரது வரவு கழகத்தை நோக்கி புதிய இளைஞர்களை ஈர்த்தது. 30 லட்சம் இளைஞர்களை புதிதாக இளைஞர் அணியில் சேர்த்தது, இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை வயது வரம்பை 35 ஆக உயர்த்தியது, கழகதலைவரின் பிறந்த நாளையொட்டி மாவட்டந்தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது என கழகத்திற்கு இளரத்தம் பாய்ச்சினார் நமது கழக இளைஞர் அணியின் செயலாளரான உதயநிதி ஸ்டாலின்.

பத்து ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து கழகம் விலகி இருந்தாலும் தமிழகத்தின் மனசாட்சியாய், பிரதான எதிர்க்கட்சியாய் துடிப்பாய் செயலாற்றி வந்தது கழகதலைவரின் தலைமையிலான நமது கழகம். பாசிச கும்பலுக்கு சாமரம் வீசி டெல்லியிடம் அடகு வைக்கப்பட்ட தமிழ்நாட்டின் தன்மானத்தை மீட்டெடுத்தாக வேண்டிய பெரும் பொறுப்பு 2021 சட்டமன்றத் தேர்தலில் இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் நமது சின்னவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஒரு தந்தைக்கேற்ற தனயனாய், தலைவரின் தொண்டனாய் பரப்புரையில் முதல் ஆளாய் களமிறங்கினார். தன் தாத்தா முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த ஊரான திருக்குவளையில் இருந்து

"விடியலை நோக்கி ஸ்டாலின் குரல்" என்ற தலைப்பில் தன் பரப்புரையை தொடங்கினார். பத்து ஆண்டு அதிமுக ஆட்சியின் அவலத்தால் துவண்டு போய் இருந்த மக்கள் அலை அலையாய் சின்னவரின் பரப்புரையில் பங்கேற்றனர். அடிமைகளின் ஆட்சியை அவர் அம்பலப்படுத்திய விதம் மக்களிடம் பெரும் எழுச்சியை உண்டாக்கியது. அத்தேர்தலில் சென்னை சேப்பாக்கம் தொகுதியில் களம் கண்டார். மக்கள் மனங்களை வென்றார். இன்று சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளையாகி போனார்.

அலங்கார மேடை பேச்சுகளை தவிர்த்து எளிய மக்களின் குரலாய் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் அப்போதைய அ.தி.மு.க. அடிமை அரசையும் நோக்கி கேள்விகளால் துளைத்தெடுத்தார் சின்னவர். அது பெருமளவில் கைகொடுத்தது, அடிமை ஆட்சி வீழ்த்தப்பட்டு நமது கழகதலைவரின் தலைமையிலான திராவிட மாடல் என்னும் கழகத்தின் பொன்னாட்சி மலர்ந்தது.

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்' என்ற சிம்மக்குரலில் தளபதியார் பதவியேற்றதை கண்டு சின்னவரோடு சேர்ந்து ஒட்டுமொத்த தமிழகமும் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது ஒரு வரலாற்று நிகழ்வு.

கழக ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினராய் ஓய்வின்றி உழைத்ததற்கு அங்கீகாரமாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை என்ற முக்கிய பொறுப்பு சின்னவர் வசம் தரப்பட்டது. அமைச்சராக பொறுப்பேற்றதும்

இந்தியாவிலேயே முதல்முறையாக 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சென்னை மாமல்லபுரத்தில் நடத்தி சென்னையை இந்தியாவின் செஸ் தலைநகரமாக மாற்றிக்காட்டினார். மதுரையில் உலகத்தரத்தில் ரேஸ்கோர்ஸ் விளையாட்டு மைதானம், கிராமங்கள் தோறும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகைகள் மாவட்டம் தோறும் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டு உள்கட்டமைப்புகளை மேம்படுத்தல் என தன் துறை சார்ந்த பணிகள், தன் தொகுதிக்கான வளர்ச்சிப் பணிகள் என அனைத்தையும் திறம்பட செய்தார் உதயநிதி ஸ்டாலின். அதன் பலனாக 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என்னும் மாபெரும் பொறுப்பு அவரை தேடி வந்தது. அப்போது துணை முதலமைச்சர் என்பது பதவியல்ல, எனக்கு கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் பொறுப்பு என்று கூறியவர். சொன்னபடியே கொண்ட கொள்கையிலிருந்து விலகாத கலைஞர் வழியில் நடப்பது, உழைப்பின் அடையாளமாக விளங்கும் கழகத் தலைவரைப் போலத் தொடர் மக்கள் பணியாற்றுவது என தொடர்ந்து அவர் திறம்பட செய்த பணி தான் இளைஞர் அணி செயலாளர் என்ற பொறுப்பில் இருந்து அவரை தமிழ்நாட்டின் துணை முதல மைச்சராக்க உயர்த்தியுள்ளது.

தன்னை நோக்கி வீசப்படும் விமர்சனங்களை சொல்லால் அல்லாமல் செயலால் எதிர்கொள்ளும் பக்குவம் வாய்க்கப்பட்ட நமது துணை முதலமைச்சர் என்றுமே கலைஞரின் வார்ப்பும், தளபதியாரின் வளர்ப்பும் தான் என்பது திண்ணம்.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று கழகதலைவரின் தலைமையில் 7 வது முறையாக கழக ஆட்சி அமைந்திட,

இளைஞர்களின்
எழுச்சி நாளாம் நவம்பர் 27
நம் சின்னவரின் தலைமையில்
சூளுரைப்போம்!
வெல்வோம் 200 !
படைப்போம் வரலாறு !

என்றும் கழகப்பணியில்

வழக்கறிஞர் ஆ.மணி
தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்

இளைஞர் எழுச்சி நாள் - மாணவர்களுக்கு இராஜபாளையம் தொகுதியில் நல உதவிகள்!

இராசா அருண்மொழி வழங்கினார்!

இராஜபாளையம், நவ. 27-

இளைஞர் எழுச்சி நாளையொட்டி இராஜாபளையம் தொகுதியில் தமிழ் நாடு சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் இராசா அருன்மொழி பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகளை வழங்கினார்.

இளம் தலைவர் தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, இளைஞர் எழுச்சி நாள் விழாவாக ராஜபாளையம் தொகுதி அயன் கொல்லம் கொண்டான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள அயன் கொல்லம் கொண்டான் அரசு உயர்நிலைப்பள்ளி ராஜபாளையம் நகராட்சி தொடக்கப்பள்ளி பத்தாவது வார்டு படிக்கிற மாணவச் செல்வங்களுக்கு உணவு, இவற்றோடு முதலமைச்சர் துணை முதலமைச்சர் படம் பொறிக்கப்பட்ட எவர்சில்வர் தட்டு உள்ளிட்டவற்றை தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரிய துணை தலைவர் இராசா அருண் மொழி வழங்கினார்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், நகர் மன்ற தலைவர் பவித்ரா சியாம், நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராசா, முன்னாள் கூட்டுறவு ஸ்டோர் தலைவர் பாஸ்கர் , சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், ஒன்றிய துணை செயலாளர் ஜெயந்தி சுந்தர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் முத்துச்செல்வி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சிங்கர சிங்கராஜ், ஒன்றிய அவை தலைவர் மிசா நடராஜன் , முன்னாள் ஒன்றியதுணைத் தலைவர் கற்பகராஜ், நகர் கழக நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட மகளிர் அணி சுமதி மாவட்ட சிறுபான்மை துணை அமைப்பாளர் இமாம் சார், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கருப்பழகு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாரி முத்து, முன்னாள் நகர அவை தலைவர் பதிவு ஜமால்,

முன்னாள் நகர துணை சச் செயலாளர் சரவணன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி செல்லச்சாமி, உதயா ரசிகர் மன்றம் ரைடர்ஸ் கிளப் தமிழ் கலைச்செல்வன், மாவட்ட வழக்கறிஞர் அணி கனகராஜ், நகர் மன்ற உறுப்பினர்கள் பாரத், பிளைவுட்ராஜ், ராணிபபாலா, சிங்கராஜ், ஷாலினி, அர்ச்சனா, வைரமுத்து, அருள், உதயா, முன்னாள் கவுன்சிலர் கமலநாதன், ஆர்டிஸ்ட் மூர்த்தி, குமார், சந்திரன், வார்டு செயலாளர் இளங்கோ, வார்டுநிர்வாகிகள் ரமேஷ், செல்வம், பெருமாள், உதயா நற்பணி மன்றம் முனிராஜ் , சேத்தூர் சக்திவேல், துரை, முருகன் உள்ளிட்டஉள்ளிட்ட ஏராளமான கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டார்கள்

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

டாக்டர் சுபேர்கான் தலைமையில்! அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நலஉதவிகள் வழங்கினார்!

சென்னை, நவ. 27 –

"சிறுபான்மையினர் போற்றும் இளம் தலைவர் பிறந்தநாள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) ஏற்பாட்டில் நடைபெற்றது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் அவர்களின் பிறந்த நாளையொட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை இராயப்பேட்டை புதுக்கல்லூரி கலையரங்கில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் எம்.எஸ் (ஆர்த்தோ) ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

முன்னதாக, வரவேற்புரையாற்றிய மாநிலச் செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் பேசுகையில், கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்கள், சிறுபான்மை யின மக்களுக்கு இன்னல் என்றால் அடுத்த நொடி, நான் இருக்கிறேன் என்று (உடுக்கை இழந்தவன் கைபோல) களத்தில் இறங்கி களமாடும் கழகத்தின் எதிர்காலம், பார் போற்றும் திராவிடமாடல் அரசின் நம்பிக்கை உதயம்; வீம்பு செய்திடும் வீணர்களை விரல் அசைவில் விரட்டிடும் கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவினை இளையோர் எழுச்சி நாளாக, சிறுபான்மையின மக்கள் போற்றும் விழாவாக, மாற்றுத்திறனாளிகள், ஏழை எளிய சிறுபான்மையின மக்களுடன் கொண்டாடுவதைவிட ஒரு சிறப்பு வேறொன்றுமில்லை' என்றார்.

அதேபோல், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கியது முதல் இதுநாள் வரை சிறுபான்மையின மக்களின் நலனுக்காக இயற்றிய திட்டங்கள் மற்றும் சாதனைகளின் தொகுப்பை கடந்த 04.11.2025 அன்று "அன்றும்!. இன்றும்!. என்றும்!. சிறுபான்மை யின மக்களின் காப்பான் தி.மு.க., எனும் தலைப்பிலான ஆவண புத்தகத்தை கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் வெளியிட்ட நிகழ்வினை சுட்டிக்காட்டி, சிறுபான்மையின மக்கள் வாழ்வு மேம்பட எண்ணற்ற நலத்திட்டங்கள் தீட்டுவது மட்டுமல்லாமல் சிறுபான்மையின மக்கள் உரிமைகளை பறிக்கத்துடிக்கும் SIR போன்ற சதித்திட்டங்களை முறியடிக்கும் பேராண்மை கொண்ட ஒரே இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கு கிறது என்று கூறினார்.

மேலும், இப்பேரியக்கத்தின் கொள்கை தொடர்ச்சியாக நம்முடைய இளம்தலைவர் அவர்கள், "இந்தியாவிலேயே சிறுபான்மை யினர் பாதுகாப்பாக வாழக்கூடிய நிலப்பகுதி உண்டென்றால் அது நம்ம தமிழ்நாடுதான் என்று கடந்த ரமலான் நோன்பு திறப்பு நிகழ்வில் கூறியதை சுட்டிக்காட்டியதுடன் சிறுபான்மையினரின் ஆதரவு தங்களுக்கே என வாய்ச்சவடால் விடும், அரசியல் கோமாளிகளுக்கும், அடிமைக் கூட்டங்களுக்கும் மற்றும் அட்டக்கத்திகளுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் சிறுபான்மையின மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கழகத்தலைவர் அவர்களை மீண்டும் இரண்டாவது முறையாகவும், கழகத்தை ஏழாவது முறையாகவும் ஆட்சியில் அமர்த்தி பதிலுரைப்போம்' என்று கூறினார்.

நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு அவர்களின் உரையைத் தொடர்ந்து, சிறப்புரையாற்றிய அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறுபான்மையினரை போற்றும் இளம் தலைவரின் பிறந்தநாள் விழாவினை, சிறுபான்மையினர் போற்றும் விழாவாக, சிறுபான்மையின மக்களுடன் கொண்டாடுவது தான் தனிச் சிறப்பு என்றதுடன், தான் முனைவர் பட்டம் பெற்று பங்கேற்கும் முதல் நிகழ்ச்சி சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவுச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் அவர்கள் நடத்தும் இளம் தலைவரின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சி என்று கூறி பெருமிதத்துடன் கழகத்திற்கும், சிறுபான்மையின மக்களுக்குமான இணிமையான உறவை எடுத்துரைத்தார்.

பாசிசம் சிறுபான்மையின மக்களை வீழ்த்த எண்ணி என்.ஆர்.சி, சி.ஏ.ஏ. என்.பி.ஆர். போன்ற சதித் திட்டமாக இருந்தாலும் சரி, கல்வி உரிமையை பறிக்கும் புதிய கல்விக் கொள்கை திட்டமாக இருந்தாலும் சரி, அடிப்படை வாக்குரிமையை பறிக்கத் துடிக்கும் SIR போன்ற எத்தகைய சதிகார திட்டமாக இருந்தாலும் சரி என்றைக்கும் சிறுபான்மையின மக்களின் பக்கம் நின்று உரிமைகளைக் காக்கும் துணிச்சல் மிக்க ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என எடுத்துரைத்தார்.

மேலும், கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் தஞ்சை சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவைச் சேர்ந்த எல்.எஸ்.ஹாஜிமுகமது அவர்களின் ஏற்பாட்டில் உருவான "நாளைய சரித்திரமே பாடலை வெளியிட்டதுடன், செவித்திறன் குறைபாடுடைய ஏழை மாண வர்களுக்கு காது கேட்பு கருவி, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, மார்க்கக் கல்வி பயிலும் மதரஸா மாணவர்களுக்கு திருக்குர்ஆன் உடன் புத்தாடைகள், உலமாக்களுக்கு புத்தாடைகளுடன் நலத்திட்ட உதவிகள் மற்றும் கிறித்துவ உபதேசியர்களுக்கு புத்தாடைகளுடன் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பித்தார்.

மேலும், இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் தலைவர் டி.பி.எம்.மைதீன்கான், இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, துணைச் செயலாளர்கள் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல் கான், முனவர் ஜான், கா.ரபி அகமது, சாகுல் அமீது, ராபர்ட் @ ராஜதுரை, இராஜேஷ் ஜெயின் மற்றும் திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், சேப்பாக்கம் பகுதி கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன், 115வது வட்ட கழகச் செயலாளர் ஜி.வெங்கடேஷ், 115 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வேங்கடசன் மற்றும் சிறுபான்மையின மாணவ மாணவிகள், உலமாக்கள் மற்றும் தேவாலய உபதேசியர்களுடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பித்த னர். நிறைவாக, சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச்.ரஹமத்துல்லா நன்றியுரையாற்றினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் பெருநகர் ஊராட்சியில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 48 கிலோ எடை உள்ள கேக் வெட்டி ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கி மற்றும் ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை, மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகம் விளையாட்டு உபகரணங்கள் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், சுப்பராயன், ஒன்றிய உறுப்பினர் ருத்ர கொட்டி, ஊராட்சி மன்ற தலைவர் மங்கள கௌரி, வடிவேலு, நாகராஜன், யுவராஜ், கமலக்கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மு.க.தமிழரசு – நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - அன்பகம் கலை - நா.எழிலன் - சைதை சாதிக் பங்கேற்பு!

துணை முதல்வர் பிறந்தநாள்: ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியில் அனைத்து வட்டங்களிலும் கழகக் கொடியேற்றி இனிப்பு!

பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள்!

சென்னை, நவ.27-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 109, 109 (அ), 110, 110 (அ), 112, 112(அ) ஆகிய அனைத்து வட்டங்களிளும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சியில் மு.க.தமிழரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்ட மன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் சைதை சாதிக், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை அந்தந்த வட்டத்தில் உள்ள வட்டக் கழகச் செயலாளர்கள் : வரதை த.பரி, க.சிட்டிபாபு, த.குணசேகர், மு. மோகன், ச.டேவிட் இன்பராஜ், தினேஷ் பிரபு ஆகியோர் தலைமை ஏற்று நடத்த உள்ளனர்.

இதில் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் : டி.ஜோஸ்டேனியல், நுங்கை வி.எஸ்.ராஜ், எம்.டி.ஆர் நாதன்,

பகுதி கழக நிர்வாகிகள் : புவி பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், இதாயத் பாஷா, கமலக்கண்ணன், ரா பொன்னம்மாள்,

அனைத்து அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பா ளர்கள், கழக நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.